# GST ROAD NEWS

TAMBARAM

Weekly News Paper

Email:gstroadnews@gmail.com www.gstroadnews.com

Chitlapakkam, Tambaram West, Tambaram East, Sanitorium, Kadapperi, Venkatraman Nagar, Nehru Nagar, Mahalakshmi Nagar, Servamangala Nagar

Vol:12 Issue -37 05 Jan 2025 - 11 Jan 2025 4 Pages - Free Circulation Ct: 99628 80902



FLAT FOR RESALE
@ WEST TAMBARAM, BHARATHI NAGAR
2BHK - 948 Sqft
UDS - 442 Sqft
2nd Floor, 11 Yrs Old, CCP, Lift
Power backup, CCTV Camera,
Security Guard Gated Community
SARAVANA REALTY
97890 52332 / 89395 70300

WANTED @CHROMEPET
* TELE CALLER
* SITE EXECUTIVE
* TEAM LEADER
* 2D 3D DRAFTER
FOR
CONSTRUCTION COMPANY
IMMEDIATE JOINING
98844 71853






செம்பாக்கம் வடக்கு பகுதி தி.மு.க. சார்பில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு அமைச்சர் தா.மோ.அன்பரசன் தொடங்கி வைத்த கண் சிகிச்சை முகாமில் சிகிச்சை செய்து கொண்ட பயனாளிகளுக்கு, 37 வது வார்டு சார்பாக மூக்கு கண்ணாடி வழங்கும் விழா வட்டச் செயலாளர் எஸ். மன்னா ராஜ கண்ணா தலைமையில் எஸ்.ராகவன், பி.ரவிச்சந்திரன், சி.ப்ரீத்தி பாய், ஆர்.சதீஷ்குமார், எஸ்.செந்தில்குமார், கே.கண்ணன், தினகர், பி.நாகராஜன், வி.ராஜேந்திரன் ஆகியோர் முன்னிலையில் எச்.பாஸ்கரன், ஜி.ஜெகநாதன், எம்.பற்குணன், சி.ஆர்.நரேஷ்குமார் ஆகியோர் வரவேற்புரையில் நடந்தது. பகுதிச் செயலாளர் ஏ.கே.கருணாகரன், மாமன்ற உறுப்பினர் மகாலட்சுமி கருணாகரன் ஆகியோர் கலந்து கொண்டு தனது சொந்த செலவில் பயனாளிகளுக்கு மூக்கு கண்ணாடி வழங்கினார். இதில் ஜே.வேணுகோபால், கே.பூபதி, சி.ஆர்.மதுரை வீரன், டி.கார்த்திக். எம்.நாகராஜ். எம்.சார்லஸ், ஆர். ராதா கிருஷ்ணன், எம்.ஐ.டி.இ.சுரேஸ் ஆகியோர் கலந்து கொண்டனர். ஏ.சீனிவாசன் நன்றி கூறினார்.


மகிழ் மஹால் திருமண மண்டபம் A/C Veg
குரோம்பேட்டை, சென்னை-600 044.
(Near.A2B & Pothys)
முகூர்த்தம் Dates Available

| | |
|---|---|
| Feb - 16,17,23,26 | April - 7 May- 4,9,28 |
| Mar - 10,12 | June - 5,6,8,28 |

97908 48703 / 96778 95140

ARUL MURUGAN THUNAI
SAI AJAY MAHAL A/C
50 Mts From GST Road Lalitha Jewellery Backside
www.saiajaymahal.com
BL PARTY HALL A/C
- FULLY AIR CONDITION
- UNDERGROUND 18 CAR PARKING
- GROUND FLOOR - 150 MEMBERS DINING
- 1 ST FLOOR - 450 MEMBERS FUNCTION HALL
- Floating 900 Members
- SUPER DELUXE 15 ROOMS
- MODULAR KITCHEN
- CCTV CAMERA
- 6 PERSONS CARRYING LIFT
- 24/7 POWER BACKUP

ONE DAY PACKAGE 2.25 L





IDEAL FOR
ENGAGEMENT, RECEPTION, WEDDING, SEEMANTHAM, AYUSH HOMAM, UPANAYANAM, BIRTHDAY, PUBERTY, 25TH ANNIVERSARY, 60TH WEDDING, 80TH WEDDING, BANQUETS HALL, CONFERENCE HALL, ALL FUNCTIONS
No.22/6A, Baskar Tower, 1st Main Road, New Colony, Chrompet, CH-44.
98401 86682 / 98400 14910 / 94444 22979

2025 -ல் அரசு அதிகாரி ஆக வேண்டுமா ?
EDUSPRINT ACADEMY
இப்போது நமது சென்னை குரோம்பேட் ராதாநகரில்
அரசு அதிகாரிகளைக் கொண்டு பயிற்சி | அரசு அதிகாரி ஆகும் வரை பயிற்சி
COURSE : SSC | RAILWAY | BANK | TNPSC
91 852400 8400
91 852400 9400
No:44, Radha Nagar MainRoad,Chromepet,
Landmark - Near Railway Station,
Chennai - 600044

PREMIUM 2,3,4 BHK FLATS FOR SALE @ CHROMEPET
KRISHNA NAGAR
(Nr.Hasthinapuram Bus Stand)






AVAILABLE
4BHK
1730 Sq Ft
(2 Covered Car parking)
3BHK
1369 Sq Ft
24 Hrs Power Backup*

PADMANABHA NAGAR
(Near GURU RAGHAVENDRA TEMPLE)






ONLY 1 FLAT AVAILABLE
3 BHK - 1394 Sqft
(2 Covered Car parking - 1 st Floor)
2 BHK - 985 Sqft

Specification
AUTOMATIC LIFT
As Per Vaasthu
CCP
CCTV
Videodoor Phone
Red Bricks Construction
Ev Charger Point
AUTOMATIC WATER TANK LEVELLER

Sankar Constructions
98416 59929 / 98416 59930

# சனிமஹாபிரதோஷம்:

சகல வினைகளையும் போக்கும் சனி மஹாபிரதோஷம்:

பிரதோஷ காலம் மாலை 4 மணியில் இரு ந்து 6.30 வரை என சொல்கிறார்கள். இந்த நேரத்தில் சிவாலயம் சென்று வலம் வந்து ஈசனைத் தரிசிக்க வேண்டும். வசதி உள்ளவர்கள் இறைவனுக்கும் நந்திக்கும் அபிஷேக ஆராதனைகள் செய்தால் நல்லது.

பிரதோஷ தரிசனம் காணும்வரை உணவு தவிர்த்து முழு விரதம் இருக்க வேண்டும். சனி மகாபிரதோஷ நாளில் இருக்கும் விர தம் ஆயிரம் சாதாரண தினப் பிரதோஷப் பலனைத் தரும் என்பது நம்பிக்கை.

பிரதோஷ வேளையில் நந்தியம்பெருமானுக்கு அருகம்புல் அல்லது வில்வ மாலை சார்த்தி நெய் விளக்கு ஏற்றி பச்சரிசி வெல்லம் வைத்து பூஜை செய்யலாம்.

பிரதோஷ நேரத்தில் மட்டும் சிவபெருமா னை வலம் வரும் விதத்தை சோம சூக்தப் பிரதட்சணம் என்பர். சோமசூக்தம் என்றா ல் அபிஷேக நீர்விழும் கோமுகி தீர்த்தத் தொட்டியை குறிக்கிறது. இந்தத் தொட்டியை மையமாக வைத்து வலம்



இடமான இடவலமாக மேற்கொள்ளப்பெறும் பிரதட்சண முறையே பிரதோஷப் பிரதட்சணம் எனப்படுகிறது.

நித்தியப் பிரதோஷம், பட்சப் பிரதோஷம், பிரளயப் பிரதோஷம் என இருபது வகை பிரதோஷங்கள் உள்ளதாக புராணங்கள் கூறுகின்றன.

சனிக்கிழமை பிரதோஷ காலங்களில் ஈசனை தரிசிப்பதால், சகல பாவங்களும் விலகி, புண்ணியம் சேரும்; சகல சௌபாக்கியங்களும் உண்டாகும்; இந்திரனுக்கு சமமான புகழும் செல்வாக்கும் கிட்டும்; அன்று செய்யப்படும் எந்த தானமும் அளவற்ற பலனைக் கொடுக்கும். பிறப்பே இல்லாத முக்தியை கொடுக்கும் என்றெல் லாம் புராணங்கள் தெரிவிக்கின்றன.

சனிப்பிரதோஷ நேரத்தில் எல்லா தேவர்க ளும் ஈசனின் நாட்டியத்தை காண ஆலயம் வருவார்கள் என்பது நம்பிக்கை. எனவே, ஆலயத்தில் உள்ள மற்ற சந்நிதிகள் திரையிடப்பட்டு இருக்கும். பிரதோஷ நேரத்தில் மற்ற ஆலயங்களுக்குச் செல்லக் கூடாது என்பதும் ஒரு ஐதீகம்.

நந்தியெம்பெருமானின் கொம்புகளுக்கி டையே சிவன் ஆடும் நேரமே பிரதோஷம் என்பதால் அன்று நந்தியின் கொம்புகளு க்கிடையே சிவனை தரிசிப்பது சிறப்பு தரும்.

பிரதோஷ நேரத்தில் நமசிவாய மந்திரம் ஜபிப்பதால், நமது முன்னோர்கள், ஏழு தலைமுறையினர் செய்த பஞ் சமாபாதகங் கள் யாவும் அழிந்துவிடும் எனப்படுகிறது.

மற்ற பிரதோஷ நேரத்தில் செய்யப்படும் தரிசனம், தானம், ஜெபதபங்கள் யாவுமே சனிப்பிரதோஷ நாளில் செய்யப்படும் போது பல மடங்கு பலன்களைத் தரும் என்பது புராணங்கள் தெரிவிக்கும் தகவல்.

பிரதோஷ நேரத்துக்குள் சிவனுக்கான அபிஷேக ஆராதனைகள், தரிசனம், புறப்பாடு என எல்லாவற்றையும் செய்துவிட வேண்டும். மாலை ஆறரை மணியுடன் பிரதோஷ காலம் முடிவதால் அதன்பின்னர் செய்யும் வழிபாடுகள் அந்திபூஜை தான் என்பதால் அது பிரதோஷ காலத்தில் சக்தியோடும், முருகப் பெருமானோடும் இணைந்த சோமாஸ்க ந்த மூர்த்தி யாகத் தரிசித்தால் குடும்ப உறவுகள் மேம்படும்.

இந்த நேரத்தில் நடராஜ மூர்த்தியை வழிபட் டால் வாழ்வில் முன்னேற் றத்தை காணலாம்.

சனிப்பிரதோஷத்தில் நந்தியை வணங்கி, வழிபட் டால் சனி பகவானால் உண்டாகும் சகல துன்பங் களும் விலகிப் போகும்.

அன்றைய நாள் முழுக்க உண்ணாமல் இருந்து சிவதரிசனம் முடித்தபிறகு உப்பு, காரம்,புளிப்பு சேர்க்காமல் உண்பது வழக்கம். சாதாரண பிரதோஷ நேரத்தில் சோம சூக்த பிரதட்சணம் செய்வதால், ஒரு வருடத்துக்கு ஈசனை வழிபாடு செய்த பலனும், சனிப் பிரதோஷ நேரத்தில் ஈசனை வழிபாடு செய்தால், ஐந்து வருடத்துக்கு ஈசனை வழிபாடு செய்த பலனும் கிடைக்கும் என்கிறார்கள்.

# சொர்ண பைரவர் வழிபாட்டை வீட்டில் எப்படி நடத்துவது

செல்வத்திற்கே அதிபதியான குபேரர் மற்றும் மகாலட்சுமி போன்றவர்களுக்கே பொன் கொடுக்கும் தலைமைக் கடவுளாக ஸ்ரீ சொர்ண பைரவர் கூறப்படுகின்றார். இந்த திருக்கோலத்தில் இடது கையில் கபாலத்துக்கு பதிலாக அட்சய பாத்திரம் இருக்கிறது. ஸ்வர்ணம் (தங்கம்) தந்தருளியவர் என்பதால் கபாலத்தை, அட்சய பாத்திரமாக வைத்திருப்பதாக சொல்கிறார்கள். இவரிடம் வேண்டிக் கொள்ள வீட்டில் செல்வம் பெருகும் என்பது நம்பிக்கை. இவர் இரண்டு நாய் வாகனங்களுடன் காட்சி தருவது மற்றொரு சிறப்பு. ஸ்ரீ சொர்ண பைரவரை ஒவ்வொரு வீட்டின் பூஜை அறையிலும் ஒவ்வொரு வழிபாட்டுத் தலங்களிலும் ஒவ்வொரு வியாபரத் தலங்களின் கல்லாப்பெட்டி அருகிலும், ஆபரணக் கடைகளிலும் இந்த சொர்ண பைரவரின் திருவுருவப் படத்தை வைத்து வழிபட்டால் செல்வம் கொழிக்கும் என்று கூறப்படுகிறது.

ஸ்ரீ சொர்ண பைரவரின் படம் அல்லது பொற்காசு அல்லது டாலர் போன்றவற்றை வடக்குத் திசை நோக்கி வைத்து வழிபாட்டை ஆரம்பிக்க வேண்டும். இப்படத்திற்கு நல்ல மணமுள்ள வண்ண மலர்களை மாலையாக அணிவித்து தாம்பூலம், பழம், தேங்காயுடன் மூன்று வேளையும் பூஜை செய்தால் நல்ல பலன் கிடைக்கும். ஸ்ரீ சொர்ண பைரவருக்கு அவல் பாயாசம் விருப்பமான நைவேத்தியமாகக் கூறப்படுகிறது. மிகவும் எளிமையான இந்த நைவேத்தியத்திற்கு மனமிரங்கி தன்னை வழிபடும் அன்பர் களின் இல்லங்களில் செல்வ மழையைப் பொழியச்



செய்வார். இந்த சொர்ண பைரவரின் படத்தை டாலரையோ சட்டைப்பை மற்றும் கைப்பை பர்சுகளில் வைத்தால் பணத்தட்டுப்பாடு வராது என்று கூறப்படுகிறது.

இதில் கவனிக்கப்பட வேண்டிய விஷயம் என்னவென்றால் சொர்ண பைரவர் படத்தினை எத்தகைய அலங்காரங்களுக்கும் பயன்படுத்தக் கூடாது. கார், மோட்டார் சைக்கிள், வீட்டு வாசற்படி, வரவேற்பறை போன்ற பலரின் நடமாட்டம் உள்ள இடங்களில் வைக்கக் கூடாது. புனிதமான பூஜை அறையில் அல்லது பூஜை செய்யப்படும் இடத்தில் மட்டுமே வைத்து வணங்க வேண்டும்.


எந்தக் காரணத்தை முன்னிட்டும் இந்தப் படத்தில் அணிவிக்கப்படும் பூமாலை அல்லது பூக்களை வாடிவிடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். வாடிய பூக்களையோ பிளாஸ்டிக் காகிதப் பூக்களையோ எந்தக் காரணத்தைக் கொண்டும் அணிவிக்கக் கூடாது.

ஞாயிற்றுக்கிழமை மாலை ராகு கால நேரமான 4.30 மணி முதல் 7.00மணி வரை , 1 1நெய் தீபம் ஏற்றி விபூதி அல்லது ருத்ராபிஷேகம் செய்து, வடைமாலை சாற்றி சகஸ்ரநாமம் செய்து வழிபட்டால் திருமணம் ஆகாதவர்களுக்கு திருமணம் கூடும். வறுமை, பகைவர்களின் தொல்லைகள், பயம் நீங்கி அவர் அருளால் அஷ்ட ஐஸ்வர்யங்களும், தன லாபமும் வியாபார முன்னேற்றம், பணி செய்யும் இடத்தில் உள்ள பிரச்னைகள் நீங்கி மனதில் மகிழ்ச்சியை பெறலாம்.

சொர்ண பைரவருக்கு பன்னீர் கொண்டு அபிஷேகம் செய்து, அதனை வீட்டில் தெளித்திட சொர்ண லாபம்கிட்டும் என்பது ஐதீகம்.

# வீட்டில் பணம் குறைந்து கொண்டே போகிறதா?...

நீங்கள் செய்யும் சில செயல்கள் வீட்டில் செல்வம் குறைய காரணமாக இருக்கிறது. நீங்கள் செய்யும் எந்த செயல்கள் பாதிப்பை ஏற்படுத்தும் என்று பார்க்கலாம். 1. கழுவப்படாத எச்சில் மற்றும் சமையல் பாத்திரங்கள் அதிக நேரம் அப்படியே இருப்பது.. 2. வீட்டில் பெண்கள் விளக்கேற்றாமல், ஆண்கள் விளக்கேற்றுவது... 3. தலை முடி தரையில் உலாவருவது.. 4. ஒற்றடைகள் சேருவது.. 5. சூரிய மறைவுக்கு பின் வீட்டைப் பெருக்குவது, துடைப்பது, தூங்குவது... 6. எச்சில் பொருள்கள், பாத்திரங்கள், காபி கோப்பைகள் ஆங்காங்கே இருப்பது... 7. தினமும் தலைக்கு குளிப்பவர்களைத் தவிர, மற்ற பெண்கள் செவ்வாய் வெள்ளி நீங்கலாக.. இதர நாளில் தலை குளிப்பது... 8. ஆண்கள் புதன் சனி தவிர, மற்ற நாளில்



தலைக்கு எண்ணெய் வைத்து குளிப்பது.. 9. குழாய்களில் தண்ணிர் சொட் டுவது... 10. சுவற்றில் ஈரம் தங்குவது... 11. செல் (கரை யான்) சேருவது... 12. பூரான் போன்ற விஷ ஜந்துகள் உலாவுவது.. 13. அதிக நேரம் ஈரத்துணிகள் போட்டு வைப்பது... 14. தேவைக்கு அதிகமான பொருட்கள் வைத்திருப்பது... வீணடிப் பது... 15. உணவுப் பொருட் களை வீணடிப்பது.. சாக்கடையில் கொட்டுவது... 16. உப்பு, பால், சர்க்கரை, அரிசி போன்றவற்றைச் சுத்தமாகத் தீரும் வரை வாங்காமல் இருப்பது... 17. குறைந்த பட்சவெளிச்சம் இல்லாமல், மின்சாரம் சேமிப்பதாகச் சொல்லிக் கொண்டு, வெளிச்ச மில்லாமல் இருட்டில் இருப் பது.. 18. மெல்லிசை கேட்காமல், சதா காலம் ராஜஸ இசையை, அதிக சப்தமுள்ள இசைகளை கேட்பது.. 19. இல்லை, இல்லை.. வராது, வராது... வேண்டாம், வேண்டாம்... போன்ற வார்த்தைகளை அதிகம் உச்சரிப்பது.. 20. படுக்கையையும், பூஜைப் பொருட்களையும் வேலையாட்களைக் கொண்டு சுத்தம் செய்வது.. 21. வாசலில் செருப்பு, துடப்பம் போன்றவற்றால் அலங்கோலப்படுத்தி வைத்திருப்பது...

GST ROAD NEWS
வெளிநாடு வாழ் தமிழர்கள் உங்கள் ஊர் செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள
www.gstroadnews.com

## ரேஷன் கடைகளில் கருவிழி அடையாள கருவி



கைரேகை அடிப்படையிலான ரேஷன் அட்டையில் சிக்கல்கள் உள்ளதால், 250 கோடி ரூபாய் செலவில் கருவிழி அடையாள கருவிகளை நிறுவத் திட்டம் உள்ளதாக உணவு வழங்கல் துறை அமைச்சர் சக்கரபாணி கூறினார்.

GST ROAD NEWS
FOR ADVERTISMENT DETAILS CONTACT
89395 26999 / 044-22236399


# CLASSIFIEDS

## FLAT RESALE

FLAT FOR RESALE
@CHORMEPET
Bharathipuram Nellaiappar, St
2 BHK - 727 Sqft (GF)
UDS - 424 Sqft 18 Yrs Old
BROKERS EXCUSE
73055 32172

FLAT FOR RESALE
@ CHROMPET
Radha Nagar, Nr. ST. Mark School
2 BHK - 1100 Sqft
UDS - 620 Sqft
1st Floor, CCP, 3 Balcony, 12Yrs
Semi furnished, Modular Kitchen, Brokers Excuse
94451 56091

FLAT FOR RESALE
@ HASTHINAPURAM
THIRUMALAI NAGAR
2.5 BHK WITH CCP
GROUND FLOOR
90% loan arranged Rs. 35L
99620 03409

உங்கள் வீட்டை உடனே வாடகைக்கு விட வேண்டுமா?
GST ROAD NEWS-ல்
விளம்பரம் செய்ய 2 x 4cm Rs.525 /-(Colour) மட்டுமே
044 - 22236399 / 89395 26999

## PLOT SALE

PLOT FOR SALE
@ POZHICHALUR
CMDA Approved
Plot
Contact Owner
93453 08972

## LEASE

FLAT FOR LEASE
@ Chrompet
Purushotham Nagar
1 BHK - 629 Sqft
Ground Floor
East Facing
Bed Room Window A/C
2 Wheeler Parking
Veg Only
Youtube@vvproperties
99412 39900

## BUILDING CONTRACT

KR HOMES
CHROMEPET-44
Home Construction
@ 2250/- Sq.Ft.,
including
OHT & Septic Tank
• Architectural Design
• Engineer Supervision
• Branded Materials
80724 99969


DISCLAIMER
Readers are advised to make appropriate enquiries while responding to advertisement in these columns. GST Road News does not vouch for any claims made by the Advertisers. The Printer, Publisher, Editor and Owner of GST Road News Shall not be held responsible for any consequences, in case such claims are found to be false.



திருமலை நகர் ஸ்ரீ சஞ்சீவி வரத ஆஞ்சநேயர் ஆலயத்தில் அனுமன் ஜெயந்தி சிறப்பு அலங்காரத்திலும் மற்றும் ஆங்கில புத்தாண்டை ஒட்டி பழகாப்பு அலங்காரத்திலும் ஆஞ்சநேயர் சிறப்பு அலங்காரத்திலும் பக்தர்களுக்கு காட்சியளித்த போது எடுத்த படம்.

# காலணி தானம்

காலணி தானம் செய்தால் பெரியோர்களை நிந்தித்த பாவம் விலகும். தீர்த்த யாத்திரை செய்த பலன் கிடைக்கும்.

நம்மை சுற்றி நாம் தினசரிக் காணக்கூடிய பலருக்கு இந்த உதவியை செய்யலாம்.

காய்கறி விற்கும் பெண், கூலியாட்கள். கட்டிட வேலை செய்பவர்கள், வயது முதிர்ந்த யாசகம் பெறுபவர்கள் இவர்களெல்லாம் காலில் செருப்பு இல்லாமல் இருப்பதை கண்டால் அவர்களுக்கு காலணிகள் வாங்கித் தரலாம்.

கிராமப்புற அரசு பள்ளி மாணவர்களுக்கும் இதை வாங்கி தரலாம்.

மாங்கல்ய சரடு தானம்

மாங்கல்ய சரடு தானம் செய்தால் காமக் குற்றங்கள் அகலும். தீர்க்க மாங்கல்ய பாக்யம் உண்டாகும்.

பொன் மாங்கல்யம் தானம்

பொன் மாங்கல்யம் தானம் செய்தால் மாங்கல்ய தோஷங்கள் நீங்கும். திருமண தடங்கல்கள் நீங்கும்.

ஏழை எளியோரின் திருமணத்திற்கு பொன் மாங்கல்யம் தானம் செய்யலாம். இதற்கு பயனாளிகளை தேடி அலையவேண்டியதில்லை.

நமது உற்றார் உறவினர்களிலேயே சற்று சல்லடை போட்டு தேடினால் யாரேனும் பயனாளிகள் கிடைக்கக்கூடும்.

# மேற்கு தாம்பரத்தில் ஆதரவற்ற குழந்தைகள் பராமரிப்பு நிலையம்

தாம்பரம் குட் லைஃப் சென்டரின் நிறுவனரான கே.பாஸ்கரன் 153 ஆதரவத்த குழந்தைகளை பராமரித்து வருகிறார்

1996ம் ஆண்டு, வேலை விஷயமாக சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்துக்கு பஸ்ஸில் போய்க் கொண்டிருந்தார். அப்போதெல்லாம் சென்ட்ரல் ரயில் நிலையம் அருகே உள்ள சாலையோரம் நிறைய குடிசைகள் இருக்கும். அந்தப் பகுதியில் மனநிலை பாதிக்கப்பட்ட ஒரு 7 வயது பெண் குழந்தை, காயத்துடன் அநாதையாக கிடந்தது. அந்த வழியே சென்றவர்கள், அய்யோ... பாவம்! என்று பரிதாபப்பட்டார்களே தவிர, அந்தக் குழந்தையை தூக்கிக்கொண்டு,



அருகே உள்ள மருத்தும்வமனைக்கு போக முயற்சிக்கவில்லை. பஸ்ஸில் இருந்தபடியே இதை பார்த்துவிட்ட அவர் நண்பருடன் சென்றார். குழந்தையைக் தூக்கிக் கொண்டு மருத்துவமனைக்கு அழைத்துச்சென்று முதலுதவி சிகிச்சை அளித்தனர்..அந்த குழந்தைக்கு சரியான இடம் கிடைக்காத சூழ்நிலையில் தான் தானே குழந்தைகளை பராமரிக்கும் நிலையம் தொடங்கும் முயற்சியை தொடங்கினார். இல்லம் ஆரம்பித்து, இப்போது 25 ஆண்டுகள் ஆகிவிட்டன. இங்கு வந்துசேர்ந்த 24 பேருக்கு திருமணம் செய்து வைத்து உள்ளனார் .720 பேர் நல்ல வேலையில்இருக்கிறார்கள் மற்ற அனைவருக்கும் இங்குள்ள பள்ளிகளில் படிக்கிறார்கள். ஆண்டுதோறும் குட் லைஃப் குழந்தை களுக்காக தீபாவளி கொண்டாடுகிறார்கள்

இங்குள்ள குழந்தைகளுக்கு எண்ணெய், ஷாம்பூ, சோப்பு, பவுடர், புத்தாடை, இனிப்பு, பட்டாசுகள் ஆகியவற்றை அன்போடு தரும் பொதுமக்களை இந்த தீபாவளிக்கும் நாங்கள் எதிர்பார்க்கிறோம். இவர்கள் மேற்படி உதவிகளை செய்வதோடு மட்டுமின்றி, இந்தக் குழந்தைகளோடு சிறிதுநேரம் இருந்து, இந்த தீபாவளியை கொண்டாட வேண்டும் என்பது எங்களுடைய ஆசை. இங்குள்ள குழந்தைகளை தேடி, உறவினர் என்று யாரும் வருவதில்லை. அதனால் தனக்கு இந்த உலகத்தில் யாருமே இல்லை என்கிற எண்ணம், அந்தக் குழந்தைகள் சிலரது மனதில் ஏற்பட்டு இருக்கலாம். அதற்கான மருந்தை நாம் ஒவ்வொருவரும் கொடுக்கலாம். தீபாவளி மட்டுமின்றி, பிறந்தநாள் உள்ளிட்ட தங்கள் குடும்ப விழாக்களன இந்தக் குழந்தைகளோடு கொண்டாடி மகிழ்ந்தால், இவர்கள் மிகவும் மகிழ்வார்கள். என்னை தேடி அத்தை வருவாங்க... மாமா வருவாங்க... தாத்தாபாட்டி வருவாங்க... என்று, இந்த குழந்தைகள் சொல்லிச் சொல்லி மகிழ்வார்கள். அந்த சந்தோஷத்தை இந்த தீபாவளி முதல் நாம் ஒவ்வெருவரும் அவர்களுக் தர முயற்சி செய்யலாமே என்றார் பாஸ்கர். இங்கே தற்போது 153 குழந்தைகள் வளர்கிறார்கள், இவர்கள் அனைவரையும் என் குழந்தைகளை போல பராமரித்து வருகிறேன் என்றார்.

தொடர்பு: குட் லைஃப் சென்டர் 7 பி லோகநாதன் தெரு, தாம்பரம் சென்னை 600045 044 22264151 .9500129070 9444994153



திங்கட்கிழமை தாம்பரம் மாநகராட்சியின் மாமன்ற கூட்டத்தில் மாநகராட்சியின் வளர்ச்சி பணிகள் மற்றும் பராமரிப்பு பணிகள் குறித்து விவாதிக்கப்பட்டு நிறை வேற்றப்பட்டது. அந்த விவா தத்தில் குறிப்பாக சுகாதாரம், பொறியியல் மற்றும் வரி விதிப்பு குறித்து விவாதிக்கப் பட்டது. இந்தக் கூட்டத்தில் மாமன்ற உறுப்பினர் சிட்லபாக்கம் சி.ஜெகன் உள்ளாட்சித் துறைக்கு மத்திய அரசு வரி வசூலிப்பு கணக்கிள் ஏற்றம் காட்டினால் தான் வளர்ச்சிப் பணி மானியங்கள் வழங்கப்படும் என்று அழுத்தம் தரும் காரணத்தினால், உள்ளாட்சித் துறை வரிகளை உயர்த்துவது மக்களுக்கு சுமையாக உள்ளது என்றும், அதற்கு பதிலாக பல குடியிருப்புகளுக்கு இதுவரை வரியே விதிக்கப்படாமல் உள்ளது. அவ்வாறான குடியிருப்புகளை வரி கணக்கீட்டில் கொண்டு வர வேண்டும் என்றும், வரியின் அளவீடுகள் குறித்தும், சொத்து வரி எதன் அடிப் படையில் சதவீதங்கள் பிரிக்கப்பட்டுள்ளது என்றும் கேள்வி எழுப்பினார். அதற்கு ஆணையர் விளக்கம் அளித்ததாவது: 2022ஆம் வருடம் 5 நகராட்சி மற்றும் 5 பேரூராட்சிகள் ஒருங்கி ணைந்து மாநகராட்சியாக உருவாக்கப்பட்டு 17 பிரிவுகளாக வரி வசூலிக்கப் பட்டு வந்திருந்த நிலையில் மிகுந்த ஏற்றத்தாழ்வுகள் இருந்ததால், தற்போது வரிகள் நான்கு (A,B,C மற்றும் D) பிரிவுகளில் கொண்டுவரப் பட்டுள்ளதாகவும் வரிவிதிப்புக்குள் அடங்கிய சதவீதங்களை இணைய தளத்தில் வெளியிடுவதாக குறிப்பிட்டார். அதற்கு மீண் டும் ஜெகன் சிட்லபாக்கத்தில் நான்கு பிரிவுகளாக வரிகளை விதிக்காமல் மூன்று பிரிவுகளில் மட்டுமே விதிக்கப் பட்டுள்ளதாகவும் பகுதி வாரியாக வரி விதிப்பினை பிரித்த அளிக்குமாறு கேட்டுக் கொண்டார்.

அதன் தொடர்ச்சியாக சிட்லபாக்கம் 43வது வார்டில் வறுமை கோட்டிற்கு கீழ் உள்ள குடியிருப்போர் வசிக்கும் பகுதிகளில் உள்ள நல சங்கங்கள் ஜெகன் வரியின் பிரிவினை மாற்றி அமைப் பதற்கு மாநகராட்சியிடம் எடுத்துறைக்குமாறு கோரிக்கை மனு அளித்தனர்.

ADMISSION OPEN FOR THE ACADEMIC YEAR 2025 -26
SLS ACADEMY
Strive......Learn..... Succeed.....
ISO 9001:2015 Certified Institute
CHROMEPET VENGAMBAKKAM
Samacheer, CBSE & ICSE Syllabus
CLASSES 1 - 8: All Subjects, Classes 9 &10 Maths. Science Social & Hindi
CLASSES 11 - 12: Maths, Applied Maths, Physics, Chemistry, Accounts, Commerce (BST)& Economics
ADDITIONAL COURSES: Abacus | Phonics | Vedic Maths, Handwriting | Spoken English, Sloka Class | Hindi (Parichaya - Praveen)
Staff Wanted for all Subjects
Both online & offline Classes Available
63834 47509 / 73972 37977

## 6 நாட்கள் விடுமுறை

தமிழ்நாட்டில் பொங்கல் பண்டிகையை ஒட்டி, வரும் 17ம் தேதி அரசு விடுமுறை அறிவித்துள்ளது.இதனால் வரும் 14 முதல் 19ம் தேதி வரை 6 நாட்கள் தொடர் விடுமுறை கிடைக்கும்.

## பட்டாசு விபத்தில் 6 பேர் உயிர்இழப்பு

சாத்தூர் அருகே பொம்மை யாபுரம் கிராமத்தில் சாய்நாத் பட்டாசு ஆலை யில் நேற்று காலையில் ஏற்பட்ட வெடி விபத்தில் 4 அறைகள் தரைமட்டமான தில் 6 பேர் உயிரிழந்தனர்.

## சீனாவில் இருந்து புதுவைரஸ்.

சீனாவில் ஹியூமன் மெடாநிமோ வைரஸ் என்ற புதிய வகை வைரஸ் பரவுகிறது என்றவுடனேயே அது அச்சத்தை ஏற்படுத்தியிருக்கிறது. இதை மிக எளிமையாக சொல்ல வேண்டும் என்றால் சாதாரண சளித் தொல்லையை ஏற்படுத்தும் ஃப்ளூ வைரஸ் போன்றது எனலாம். சுவாசப் பாதையில் பாதிப்பை ஏற்படுத்தும் மற்றுமொரு வைரஸ் இது. இந்த வகை வைரஸ் பாதிக்கப்பட்ட ஒரு நபரிடம் இருந்து இன்னொரு நபருக்குப் பரவும். வைரஸால் பாதிக்கப்பட்ட நபர் தொட்ட பொருட்கள், புழங்கிய இடங்களில் இருந்து இன்னொருவருக்குப் பரவும்.

## பள்ளி தாளாளருக்கு நீதிமன்ற காவல்

விக்கிரவாண்டி அருகே தனியார்பள்ளியில் உள்ள கழிவுநீர் தொட்டியில் விழுந்து 4 வயது சிறுமி உயிரிழந்த சம்பவம்பள்ளி தாளாளர் எமில்டா, முதல்வர்டோமோனிக் மேரி ஆகியோரை வரும் 10ம் தேதி வரை நீதிமன்ற காவலில் வைக்க நீதிபதி உத்தரவு பிறப்பித்தார்.



## தங்கம் விலை

சென்னையில் ஆபரணத் தங்கத்தின் விலை கிராமுக்கு ரூ.45 குறைந்து, ஒரு கிராம் ரூ. 7,215க்கும் சவரனுக்கு ரூ.360 குறைந்து ரூ.57,720க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

JOB WANTED
WANTED @CHROMEPET
CARE TAKERS
Timings: 8.30 am to 05.30 pm
Salary - 12,000/-
98402 72483

SPECIAL INVITATION
SENIOR CITIZENS, HOME MAKERS & VRS
AGE - 40 TO 70 YEARS
QUA: SSLC AND ABOVE
RAGHAVENDRAN .R
98842 94811

WANTED @SANATORIUM
♦ FEMALE ACCOUNTANT
♦ SITE CIVIL ENGINEER EXP
AGE BELOW 30
94445 67836 /96000 41841

TUITION
On-Line Also. Age No Bar
HINDI PRACHAR SABHA PARICHAYA TO PRAVEEN
SPOKEN HINDI - ENGLISH
HINDI - ENGLISH - SANSKRIT - TAMIL
Search @ Google & Just dial for MPR Hindi Study Centre
87545 19519 98418 19519

DOCTOR CLINC
GUNASEELAM CLINIC
Dr. KR. ADHI VENKATRAMAN
MD., (PHILIPPINES) (GENERAL PHYSCIAN)



HOME VISIT AVAILABLE
8939 88 9918
9840 05 5112

## இளம் வயதிலேயே நரையால் வேதனையா... சில இயற்கை வழிமுறை உங்களுக்காக!!!



முடி உதிர்தல், இளநரை, பொடுகு அரிப்பு, பேன் தொல்லை, சொட்டை எனக் கூந்தலைப் பாதிக்கும் பிரச்சினைகள் ஏராளம். கூந்தல் பிரச்சினைகள் சிலவற்றை எதிர்கொள்ள ஆலோசனைகள் உங்களுக்காக.

கூந்தல் உதிர்வு: தேங்காய் பாலைத் தலையில் அரை மணி நேரம் ஊற வைத்துக் குளித்தால் முடி உதிர்வது நிற்கும். வாரம் ஒரு முறை இப்படியாக முடி உதிர்வது நிற்கிற வரை செய்ய வேண்டும். அதிமதுரத்தை இடித்து எருமைப்பால் விட்டு நன்றாக அரைத்து தலையில் தேய்த்து வந்தாலும் குணம் தெரியும்.

இளநரை நீங்க: நாட்டு மருந்துக் கடைகளில் வேம்பாளம் பட்டை என்று கிடைக்கும். அதை வாங்கிப் பொடி செய்து தேங்காய் எண்ணெயில் கலந்து தடவி வரலாம். நெல்லி முள்ளியுடன், கரிசலாங்கண்ணி, அதிமதுரம் ஆகியவற்றை சம அளவு எடுத்துச் சேர்த்து, அரைத்து தலையில் தேய்த்து ஊறவைத்துக் குளித்து வரலாம்.

கடுக்காய்க்கு நரையை அகற்றிக் கருமையாக்கும் தன்மை உண்டு. கரிசலாங்கண்ணிச் சாற்றையும், கடுக்காய் ஊறிய தண்ணீரையும் கலந்து தலையில் தேய்த்துச் சிறிது நேரம் ஊறியதும் குளிக்க வேண்டும். சீரகம், வெந்தயம், வால் மிளகு, ஆகியவற்றை சம அளவு எடுத்துப் பொடி செய்து தேங்காய் எண்ணெயில் கலந்து தலைக்குத் தடவி வந்தாலும் குணம் தெரியும்.

16 ஆம் நாள் புகழ் அஞ்சலி
படத்திறப்பு
செவ்வாய்க்கிழமை 07.01.2025
மாலை 6 மணிக்கு நடைபெறும்
இதனையே அழைப்பாக ஏற்று
அனைவரும் வருக.
இடம்
எண் 33 ,1 வது மெயின் ரோடு சாஸ்திரி காலனி, வெற்றி தியேட்டர் பின்புறம் குரோம்பேட்டை, சென்னை 600 044 94455 61227




கலைமாமணி புலவர் த.வேலு
எம்.ஏ.,பி.லிட்.,பி.டி.,
செ.முருகன் (எ) ரஜினி முருகன் M.A
AC REAL ESTATE & HM CONSTRUCTION

## KIDS AREA



Haasini.V, 4Dth Std
Sreevatsa Viswanatha Vivekananda Vidyalaya



M.Madhavan 3rd Std
Sri sathya sai institute Nemilicherry. Chrompet

இப்பகுதியில் உங்கள் குழந்தைகள் வரையும் ஓவியம் இடம்பெற வேண்டுமா?
89396 05795 Mail Id - gstnews68@gmail.com

NETLON
SAI SRI DHARSHINI ENTERPRISES
Plot No:10, Door.13, Mageshwari Nagar, 3rd Street, Hasthinapuram, Chennai - 600 064.




PROPRIETOR M.VENKATESH, B.COM.,
97103 55252 / 86109 10731

BUYING / SELLING
BUYING / SPOT CASH
WORKING AND NOT WORKING
A/C, BRASS,STAINLESS STELL, FRIDGE, OLD COMPUTER, LAPTOP, UPS, BATTERIES, MUSIC SYSTEM, WATER HEATER, GYM ITEMS, WOODEN FURNITURE, SOFA SET, COT, BEURO, DINING SET, DRESSING & OFFICE TABLE, OLD ALUMINIUM
ALL A TO Z SCRAPS
SRIRAM TRADERS
94441 33979

## புறநகர் மின்சார ரயில் சேவையில் மாற்றம்

“சென்னை கடற்கரை தாம்பரம் இடையே இயக்கப்படும் புறநகர் மின்சார ரயில் சேவையில் இன்று மாற்றம் செய்யபட்டு உள்ளது.

தாம்பரம் பணிமனையில் மேற்கொள்ளப்படும்பணிகள் காரணமாக காலை 7 முதல் மதியம் 2 மணி வரை இரு மார்க்கங்களிலும் ரயில்கள் ரத்து செய்யப்பட்டு உள்ளன.

அதற்கு மாறாக சென்னை கடற்கரை பல்லாவரம் இடையே சிறப்பு ரயில்கள்



இயக்கம்செங்கல்பட்டு கூடுவாஞ்சேரிஇடையே இரு மார்க்கத்திலும் சிறப்பு ரயில்கள் குறிப்பிட்ட நேரத்தில் இயக்கப்படுகின்றன.



திமுக அயலக அணி சார்பில் குவைத் தளபதி பேரவை நடத்திய திராவிட .மாடல் ஆட்சியின் மூன்றாண்டுகள் சாதனை விளக்க மாநாட்டிற்கு சிறப்பு விருந்தினர்களாக குவைத் நாட்டிற்கு வருகை தந்த திமுக அமைப்பு செய லாளர் ஆலந்தூர் ஆர்.எஸ் பாரதி தாம்பரம் மாநகர துணை மேயர்.காமராஜ் ஆகியோருக்கு குவைத் விமான நிலையத்தில் வரவேற்பு அளிக்கபட்ட காட்சி.












Published by K.MURUGANANTHAM Plot No:4/7, Padmanaban Nagar, Karumariamman Kovil First Street, Chrompet - 600 044. Printed by him B.Ashok kumar at RATHNA OFFSET PRINTERS, No:40, Peter's Road, Royapettah, Ch- 14. Editor: K.MURUGANANTHAM. RNI No. TNBIL / 2013 / 48725